தொலைபேசி : 0416-2253329
மின்னஞ்சல் : dfovellore@gmail.com

## தமிழ்நாடு வனத்துறை

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.தூ.கோ.அசோக்குமார், இ.வ.ப.,<br>மாவட்ட வன அலுவலர்,<br>வேலூர் வனக்கோட்டம்,<br>வேலூர்-9. | இயக்குநர்,<br>கல்வி கல்லூரிகள் வேலூர்,<br><br>அனைத்து அரசு மற்றும் தனியார் கல்லூரி முதல்வர்கள்,<br><br>முதன்மை கல்வி அலுவலர், வேலூர்<br><br>அனைத்து அரசு மற்றும் தனியார் மேல்நிலைப்பள்ளி/ உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்<br><br>அனைத்து அரசு மற்றும் தனியார் நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,<br><br>அனைத்து அரசு மற்றும் தனியார் ஆரம்பப்பள்ளி தலைமை' ஆசிரியர்கள்,<br>வேலூர் மாவட்டம். |

ந.க.எண் : 7958/2025/எம், நாள் :16 .09.2025.

அய்யா,

பொருள் : வனம் -வனஉயிரின வாரவிழா - முதல் வாரம் அக்டோபர் 2025-ல் கொண்டாடுதல் - போட்டிகள் விவரம் தெரிவித்தல் - சம்பந்தமாக.

பார்வை : முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண். HOTNFD/2745/wl6, நாள் : 24.08.2025.

- - - -

வனத்துறையின் சார்பாக, ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் வாரம் வனஉயிரின வாரவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் வனஉயிரின வாரவிழாவினை சிறப்பான முறையில் கொண்டாடும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்பாக மாவட்ட அளவில், மாணவ / மாணவிகளுக்கு ஓவியப்போட்டி, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் வினாடி வினா நடத்தப்பட உள்ளது. எனவே மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ள மாணவ / மாணவிகளின் பெயர் விபரங்களை வகுப்பு வாரியாக, ஒவ்வொரு பிரிவிலும் **அதிகபட்சம் மூன்று மாணவ/மாணவியருக்கு மிகாமல்** கீழ்க்கண்ட விவரப்படி கீழ் குறிப்பிட்டுள்ள பள்ளிக்கு உரிய பொறுப்பாசிரியர் மூலம் கலந்துகொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்படி போட்டிகள், ஊரிசு மேல்நிலைப்பள்ளி, அண்ணாசாலை, வேலூர் என்ற இடத்தில் 07.10.2025ம் செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

போட்டிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

I) பேச்சுப்போட்டி

**a) Categories**

| | | |
|---|---|---|
| Group 'A' | - | L.K.G to I Std |
| Group 'B' | - | II Std to V Std |
| Group 'C' | - | VI Std to VIII Std |
| Group 'D' | - | IX Std to XII Std |
| Group 'E' | - | College Students |
| Group 'F' | - | Special Category for Physically challenged person |

பேச்சுப்போட்டி மூன்று நிமிடங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம்

1. ஆங்கில பேச்சுப்போட்டி – தலைப்பு **"Human – Wildlife Coexistence"**

2. தமிழ் பேச்சுப்போட்டி – தலைப்பு - **"மனித – வன உயிரினங்களுக்கு இடையிலான சகவாழ்வு"**

II) ஓவியப்போட்டி

**a) Categories**

| | | |
|---|---|---|
| Group 'A' | - | L.K.G to I Std |
| Group 'B' | - | II Std to V Std |
| Group 'C' | - | VI Std to VIII Std |
| Group 'D' | - | IX Std to XII Std |
| Group 'E' | - | College Students |
| Group 'F' | - | Special Category for Physically challenged person |

ஓவியப்போட்டி (பொருள்) – **Participatory Wildlife Conservation.**

(வன உயிரினங்கள் பாதுகாப்பில் நமது பங்களிப்பு – வன உயிரினங்களை பாதுகாத்தலின் அவசியம்)

III) வினாடிவினா போட்டி

**c) Categories**

| | | |
|---|---|---|
| Group 'A' | - | VII Std to X Std |
| Group 'B' | - | XI Std to College |
| Group 'C' | - | Special Category for Physically challenged persons |

வினாடிவினா (பொருள்) – **"Environment, Forests and Wildlife"**

(சுற்றுச்சூழல், வனம் மற்றும் வன உயிரினம்)

IV) கட்டுரை போட்டி

**c) Categories**

| | | |
|---|---|---|
| Group 'A' | - | VII Std to X Std |
| Group 'B' | - | XI Std to College |
| Group 'C' | - | Special Category for Physically challenged persons |

கட்டுரை போட்டி (பொருள்) – **Human – Wildlife Coexistence**
**(மனித – வன உயிரினங்களுக்கு இடையிலான சகவாழ்வு)**

ஓவிய போட்டிக்கு தேவையான உபகரணங்களை (சார்ட் பேப்பர் தவிர) மாணவ / மாணவிகள் தாங்களாகவே கொண்டு வர கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து போட்டிகளும் 07.10.2025 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் ஊரிசு மேல்நிலைப்பள்ளி, அண்ணாசாலை, வேலூரில் நடத்தப்படும். போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட அளவிலான பரிசளிப்பு விழாவில் (08.10.2025 பிற்பகல் 3.00 மணியளவில்) பரிசுகள் / சான்றிதழ்கள் வழங்கப்படும். (மேலும் விபரங்களுக்கு தொடர்பு எண். வேலூர் வனச்சரக அலுவலர் தொலைபேசி எண்:9786405168, திரு.எஸ்.ரமேஷ்குமார் ஜெயின், (தன்னார்வலர்) தொலைபேசி எண் : 9443447370.

எனவே தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் மூன்று மாணவ மாணவிகளுக்கு மிகாமல் உரிய பொறுப்பாசிரியர் மூலம் கலந்து கொள்ள அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வன உயிரின வாரவிழா நிறைவு விழாவின் போது பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தங்கள் அன்புள்ள,
ஒம் /– தூ.கோ.அசோக்குமார்,
மாவட்ட வன அலுவலர்,
வேலூர் வனக்கோட்டம், வேலூர் –9.

நகல் : தலைமை வனப்பாதுகாவலர், வேலூர் மண்டலம்
அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்: முதன்மை கல்வி அலுவலர், வேலூர்

நகல் : மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்–9

நகல் : மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், வேலூர் மற்றும் இராணிப்பேட்டை கல்வி மாவட்டம்.

நகல் : உதவி வனப்பாதுகாவலர், வேலூர். அவர்களுக்கு விழாவினை சிறப்பாக நடத்திட வேண்டி உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

நகல் : அனைத்து வனச்சரகர்களுக்கும் தக்க நடவடிக்கைக்காக.
தங்கள் சரக எல்லைக்குட்பட்ட அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கும் உடன் தகவல் தெரிவித்து, பள்ளி/கல்லூரிகளிடமிருந்து ஒப்புதல் பெற்று போட்டிகளில் பங்கேற்கும் மாணவ மாணவியர்களின் பட்டியல் விவரத்தினை சமர்ப்பிக்குமாறும், போட்டி அன்று மாணவ மாணவிகள் தவறாமல் கலந்து கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் அனைத்து வனச்சரகர்களும் தங்களுடன் இரண்டு வன பணியாளர்களுடன் தவறாது கலந்து கொண்டு போட்டித்தேர்வினை நடத்திட மற்றும் கண்காணித்திட வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நகல் : வனச்சரகர், வேலூர் – வனஉயிரின வாரவிழா
போட்டிகளை நடத்திட வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

நகல் : தலைமை ஆசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பபள்ளி, அண்ணாசாலை, வேலூர்

நகல் : திரு. JC.PP.JFP .எஸ்.ரமேஷ்குமார் ஜெயின், எம்.ஏ., No.3 New Town Hospital, Kalaspalayam, Vellore (தன்னார்வலர் மற்றும் மாவட்ட தீத்தடுப்பு காப்பாளர் வேலூர் மாவட்டம், போட்டிகளை நடத்திட உரிய முன்னேற்பாடுகளை வனச்சரக அலுவலர், வேலூர், அமிர்தி அவர்களுடன் இணைந்து நடத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

குறிப்பு :–

**பள்ளி மாணவ மாணவிகள் தாங்கள் பள்ளி/கல்லூரி பெயர், விலாசம், அலைபேசி/ தொலைபேசி எண்.தெளிவாக எழுதிகொடுக்கவும்.**

**மாணவ/மாணவிகள் பெயர், வகுப்பு அலைபேசி எண். அவசியம் தெளிவாக கொடுக்கவும்.**

// உ.ந.உ.ப. //

கண்காணிப்பாளர். 16/9/25

16.9.25